**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 823 Of 2024

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23- வது நாள் செவ்வாய்கிழமை 1969 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அனித் சங்கர் | கிராமம்: | |
| க.பெ. (அ) த.பெ. | திரு. சங்கரையா | வேலை: | மேலாளர், கனரா வங்கி (முன்பு சிண்டிகேட் வங்கி), அன்னூர் கிளை. |
| வயது | 34 | செல்போன் எண் | |

வா.சா.1 **திரு. அனித் சங்கர்** ஆக 23.09.2025 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள்

உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 17.09.2013 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் - அசல் - **Ex.A1** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. 21.09.2013 – 1-ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த விவசாய கடன் ஒப்பந்தம் - அசல் - **Ex.A2** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. 21.09.2013 – 2-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஜாமீன்தாரர் ஒப்பந்தம் - அசல் - **Ex.A3** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

4. 26.08.2016 – 1-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Acknowledgement of Debt - அசல் - **Ex.A4** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

5. 12.08.2019 – 1-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Acknowledgement of Debt - அசல் - **Ex.A5** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

6. 15.02.2022 – 1-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Acknowledgement of Debt - அசல் - **Ex.A6** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

7. 21.09.2013 to 22.12.2023 – 1-ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள வங்கி கணக்குப்பட்டியல் - கணினி வழி - அசல் - **Ex.A7** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

8. 08.05.2014 – Mediation Report - அசல் - **Ex.A8** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நீங்கள் வாதி வங்கி கிளையில் எந்த தேதியில் இருந்து பணிபுரிந்து வருகிறீர்கள் என்றால் மே 2025 ல் இருந்து இந்த கிளையில் பணிபுரிந்து வருகிறேன். வா.சா.ஆ. 4 ல் Balance outstanding as on date என்ற இடத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். Acknowledgement of Debt ஆவணம் கடன் வழங்கும் சமயத்தில் கடன் வாங்குபவரிடம் பெறப்படும் என்றால் சரியல்ல, 3 வருடத்திற்கு ஒரு முறை பெறப்படும். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4 ல் எழுத்தால் எழுதப்பட்ட கையெழுத்து ஒரு மாதிரியாகவும் வா.சா.ஆ.4 ல் தேதி மற்றும் வட்டித்தொகை உடன் கூட்டிய கடன் விவரம் வேறு நபரின் கையெழுத்து போல் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் இரண்டு விதமான கையெழுத்துக்களும் பேனா மையும் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தை நிரப்பியது யார் என்ற விவரம் வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த விவரம் வா.சா.ஆ.4 ல் தேவையில்லை. வா.சா.ஆ.4 ல் சாட்சி கையொப்பம் யாரும் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு முன்பு பிரதிவாதிக்கு ஏதேனும் அறிவிப்போ அல்லது கடிதமோ அனுப்பப்பட்டதா, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணம் வழக்கை காலவரை தோஷத்தில் இருந்து காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட போலி ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.5 Acknowledgement of Debt ல் 12.08.2019 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தை நிரப்பியது யார் என்ற விவரம் வா.சா.ஆ.5 ல் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த விவரம் வா.சா.ஆ.5 ல் தேவையில்லை. வா.சா.ஆ.5 ல் சாட்சி கையொப்பம் யாரும் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் Date of facility 21.09.2013 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் 21.09.2013 தேதியில் இருந்து 12.08.2019 தேதிக்குள் வேறு ஒரு Acknowledgement of Debt ஆவணம் பிரதிவாதியிடம் பெறப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ன் படி 21.09.2013 ல் வாங்கிய கடனுக்கு 12.08.2019 ல் Acknowledgement of Debt கொடுக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 Acknowledgement of Debt காலவரைக்குப் பின்பு பெறப்பட்டதாக கண்டுள்ளது ஆகையால் வா.சா.ஆ.5 செல்லத்தக்கது அல்ல, வா.சா.ஆ.5 ஆவணம் காலவரை தோஷத்தை நிவர்த்தி செய்யாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்திற்கு முன்பு பிரதிவாதிக்கு ஏதேனும் அறிவிப்போ அல்லது கடிதமோ அனுப்பப்பட்டதா, அதை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணம் வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட போலி ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 01.04.2020 அன்று முதல் சிண்டிகேட் வங்கி கனரா வங்கியுடன் இணைக்கப்பட்டது என்றால் சரிதான். சிண்டிகேட் வங்கியில் இருந்து 01.04.2020 வரை பிரதிவாதிக்கு எந்த வித கடிதமோ அறிவிப்போ கடன் கணக்கு விசயமாக அனுப்பப்படவில்லை என்றால் சரிதான், வாய்மொழியாக தகவல் சொல்லி இருப்பார்கள். வாய்மொழியாக தகவல் சொல்லி இருப்பார்கள் என்பதற்கு எந்தவித ஆவண ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல, அந்த சமயத்தில் நீங்கள் சிண்டிகேட் வங்கியில் பணியிலும் இல்லை என்றால் இந்த கிளையில் பணியில் இல்லை 2017 ல் இருந்து வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். சிண்டிகேட் வங்கி கனரா வங்கியுடன் இணைக்கப்பட்ட விவரத்தை பிரதிவாதிக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 Acknowledgement of Debt ல் 15.02.2022 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் உள்ள கையெழுத்து 1ம் பிரதிவாதியின் கையெழுத்து அல்ல, வங்கி ஊழியர்களே வா.சா.ஆ.6 ல் பிரதிவாதியின் கையொப்பத்தை போட்டு வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ல் உள்ள கையெழுத்து 1ம் பிரதிவாதியின் கையெழுத்து தான். வா.சா.ஆ.6 ஆவணத்தை எழுதிப் பெற்ற வங்கி அதிகாரியின் பெயர் என்ன என்றால் மேலாளர் அசரா பீவி ஆவார். வா.சா.ஆ.6 ல் நீங்கள் சொல்லும் மேலாளர் அசரா பீவியின் கையொப்பத்தை தவிர அவரது பெயர், முகவரி, வகித்த பதிவி போன்ற விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், அவரின் கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்ற காரணத்தினால் வா.சா.ஆ.6 ல் அவர் தான் கையொப்பம் செய்தார் என சாட்சியம் அளித்துள்ளேன். வா.சா.ஆ.6 ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் நீங்கள் நீங்கள் சொல்லும் மேலாளர் அசரா பீவி வாதி வங்கியின் கிளையில் பணிபுரிந்தார் என்பதை ஊர்ஜீதம் செய்ய எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்ய இயலும். வா.சா.ஆ.6 ல் பிரதிவாதியின் முகவரி விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் ரூபாய்.1,08,000/- என எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல ரூபாய்.1,00,000/- என்று தான் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 ல் எழுதப்பட்டது ரூபாய்.1,08,000/- அல்லது ரூபாய்.1,00,000/- என்பதை ஊர்ஜீதம் செய்ய அதை ஏற்படுத்தியவரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தை நிரப்பியது யார் என்ற விவரம் வா.சா.ஆ.6 ல் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த விவரம் வா.சா.ஆ.6 ல் தேவையில்லை.

வா.சா.ஆ.6 ல் உள்ள 1 ம் பிரதிவாதியின் கையெழுத்து வழக்கு போடுவதற்கு முன்பாக ஆவணம் ஏற்படுத்தப்பட்டு கையொப்பம் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ல் உள்ள 1 ம் பிரதிவாதியின் கையெழுத்தும் வா.சா.ஆ.6 ல் உள்ள 1 ம் பிரதிவாதியின் கையெழுத்தும் வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ல் மூன்று விதமான பேனா மைகள் கண்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட நகலில் வா.சா.ஆ.6 ஆவணத்தில் 1 ம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் என்னிடம் காட்டப்படும் நகலில் வா.சா.ஆ.6 ல் 1 ம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை.

(1-ம் பிரதிவாதிக்கு வழக்கு ஆவண நகல்கள் எப்போது கொடுக்கப்பட்டது என நீதிமன்றம் கேள்வி எழுப்பியது, அதற்கு இரு தரப்பினரும் மின்னஞ்சல் மூலம் ஆவணம் அனுப்பப்பட்டதாக கூறினர். எந்த தேதியில் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது என நீதிமன்றம் கேள்வி எழுப்பியது அதற்கு இரு தரப்பினரும் எந்த தேதியில் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது என்பதை தெரிவிப்பதாக கூறினார்கள்)

பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2025.09.23 16:45:03 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.